2013 மே 3]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.*

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிற்பக்கலை அழியக் கூடாது. அதைப் பாதுகாக்க வேண்டுமென்பதுதான் இந்த அரசின் நோக்கமாகும். இந்த அரசின் கொள்கையாகும். ஆனால், இன்றைய நவீன உலகத்தில் இளைஞர்கள், மாணவர்கள் சிற்பக்கலையைக் கற்பதற்கு முன்வருவதில்லை. அதனால்தான் மிகவும் பிரசித்திப்பெற்ற மாமல்லபுரத்தில் உள்ள சிற்பக்கலைக் கல்லூரியில்கூட மாணவர்களின் எண்ணிக்கை குறைந்து கொண்டே வருகிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெளிவாகத் தெரிவித்தார்கள். மாணவர்கள் இப்பொழுதெல்லாம் இந்தக் கலைகளை கற்க விரும்பவில்லை; முன்வரவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற ஊரில், ஒரு புதிய கல்லூரியைத் துவக்குவதில் அரசுக்கு எந்த சிரமமும் இல்லை. ஆனால், போதுமான அளவில் மாணவர்கள் வந்து சேர்வார்கள்; பயில்வார்கள் என்ற உத்தரவாதத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அளிக்க வேண்டும். அப்படி அளித்தால், நாங்கள் கல்லூரியைத் துவக்குவதற்குத் தயாராக இருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 394, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

394—

24 மணிநேர மருத்துவமனை

***4235—திரு. பி.வி. கதிரவன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, விக்கிரமங்கலத்தில் 24 மணிநேர மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஊராட்சி ஒன்றியம், விக்கிரமங்கலத்தில் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. இது விரிவுபடுத்தப்பட்டு, 24 மணி நேரமும் பிரசவ கவனிப்பு சேவை வழங்கும் சுகாதார நிலையமாக சிறந்த முறையில் செயல்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.*

முற்பகல் 11–15

திரு. பி.வி. கதிரவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தொகுதி, விக்கிரமங்கலத்தில் தற்போது கூடுதல் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் இருந்து வருகிறது. அதிலே இரண்டு மருத்துவர்கள், 3* Staff Nurses, *5 கிராம சுகாதார செவிலியர்கள், ஒரு மருந்தாளுனர் இப்போது இருந்து வருகிறார்கள்; 7 படுக்கை வசதிகள் கொண்ட மருத்துவமனையாக அது இயங்கி வருகிறது. அதனை மகப்பேறுவிற்காக மட்டுமே பயன்படுத்தி வருகிறார்கள். இந்த விக்கிரமங்கலம் கிராமத்தைச் சுற்றியுள்ள 7 பஞ்சாயத்துகளில், கிட்டத்தட்ட 60 கிராமங்கள் இருக்கின்றன. கிட்டத்தட்ட 30 ஆயிரம் மக்கள் வசிக்கின்ற அந்தப் பகுதியில், இந்தக் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தவிர வேறு மருத்துவமனைகள் இல்லை. 25 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள மதுரைக்குச் செல்ல வேண்டும்; இல்லையெனில், 25 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள உசிலம்பட்டிக்குச் செல்லவேண்டும். ஆனால், அங்கே போதுமான இட வசதி இருக்கின்றது. அந்த அடிப்படையிலே அதனை 30 படுக்கை வசதிகள் கொண்ட 24 மணி நேர மருத்துவமனையாக அமைத்திட அரசு முன்வருமா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, விக்கிரமங்கலத்தில் உள்ள கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தில்*

2013 மே 3]

2 மருத்துவர்கள், 3 செவிலியர்கள், ஒரு பகுதி நேர சுகாதார செவிலியர், 5 கிராம சுகாதார செவிலியர்கள், ஒரு உதவி பெண் செவிலியர், ஒரு மருத்துவப் பணியாளர் என்ற அளவில் மருத்துவப் பணியிலே அவர்களெல்லாம் அங்கே ஈடுபட்டிருந்தாலும், 24 மணி நேரமும் கர்ப்பிணித் தாய்மார்களுக்குப் பிரசவம் பார்க்கப்படுகின்றது.

அதுமட்டுமல்லாமல், அவர் சொல்கிற விக்கிரமங்கலத்திலிருந்து 8 கிலோ மீட்டர் தொலைவில் செல்லம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள செல்லம்பட்டி ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்கெனவே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே, 2004-லே 30 படுக்கைகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரமுயர்த்தப்பட்டுள்ளது. மேலும், 18 கிலோ மீட்டர் தொலைவில் உசிலம்பட்டி அரசு மாவட்டத் தலைமை மருத்துவமனை அமைந்துள்ளது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியுள்ள உசிலம்பட்டி தொகுதி, விக்கிரமங்கலத்தில் அமைந்துள்ள கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம், 24 மணி நேரமும் தொடர்ந்து செயல்படுகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.*

திரு. பி.வி. கதிரவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்கள் விளக்கமான பதிலை அளித்திருக்கின்றார்கள். இருந்தாலும்கூட, அந்தப் பகுதியில் கிட்டத்தட்ட 30 ஆயிரம் பேர் வசித்து வருகிறார்கள்; 60-க்கும் மேற்பட்ட கிராமங்கள் அங்கே இருக்கின்றன. எனவே, அதைக் கருத்தில்கொண்டு, அந்தக் கூடுதல் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தினை 30 படுக்கை வசதிகள் கொண்ட அரசு மருத்துவமனையாக மேம்படுத்தினால், அந்தப் பகுதி மக்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். அதுமட்டுமல்ல; அந்த மருத்துவமனைக்கு 5 ஏக்கர் நிலம் ஏற்கெனவே கொடுக்கப்பட்டிருக்கிறது; 5 ஏக்கர் அரசு நிலமே இருக்கின்றது. எனவே, அதைக் கருணையோடு மாண்புமிகு முதல்வர் அவர்களும், மாண்புமிகு அமைச்சர் அவர்களும் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மருத்துவமனைக்கு சராசரியாக ஒரு நாளைக்கு 169 நபர்கள் வெளி நோயாளிகளாகவும், மாதம் ஒன்றுக்கு 44 உள் நோயாளிகளும் வருகிறார்கள்; மாதம் ஒன்றுக்கு 10 பிரசவங்கள் மட்டும் நடைபெறுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, எதிர்வருகின்ற காலங்களில் துறையின் மூலமாக ஆய்வு செய்து, அந்தப் பகுதியினுடைய தேவைக்கேற்ப, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று, உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.*

[குறிப்பு: *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]*

2. தகவல் கோரல்

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

திரு. எல். வெங்கடேசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் உங்களிடம் ஒரு கவன ஈர்ப்பு அறிவிப்புக் கொடுத்திருந்தேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதெல்லாம் என்னுடைய ஆய்வில் உள்ளது. (குறுக்கீடு) அதெல்லாம் என்னுடைய ஆய்விலே உள்ளது. என்னுடைய அறையிலே வந்து கேளுங்கள். (குறுக்கீடு) இல்லை, அது என்னுடைய ஆய்விலே உள்ளது. என்னுடைய அறையிலே வந்து கேளுங்கள்.*

திரு. எல். வெங்கடேசன்: *நான் அதைக் கொடுத்து நான்கு நாட்கள் ஆகிவிட்டன.*